மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இந்த அரசினுடைய கொள்கையே தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் ஏதாவது வேறுபாடு ஏற்பட்டால், அவர்கள் கலந்து பேசி முடிவு எடுக்க வேண்டும் என்ற அடிப்படையைக் கொண்டதாகும். ஆகையினால், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் தெரிவித்தது போல், இந்தப் பிரச்சினையை விரைவில் முடிப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

3. அறிவிப்புகள்.

(அ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் பற்றிய மேலவைத் தலைவரின் செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கீழ்க்கண்ட சட்டமுன் வடிவுகள் சட்ட மேலவையில் 29—6—1971-ம் நாளன்று திருத்தங்களில்லாமல் நிறைவேற்றப்பட்டன என்று சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வரப்பெற்றுள்ளது :—

(1) 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1971).

(2) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோக தாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1971).

மேலும், தமிழ் நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1971), 29—6—1971-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுக்கப்பட்டு பரிந்துரை ஏதும் செய்யப் படவில்லை என்றும் சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

(ஆ) சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றொரு அறிவிப்பு. சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்காக Madras University Senate) கீழ்க்கண்ட எட்டு பெயர்கள் நியமனம் செய்யப்பட்டன :—

1. திரு. கே. எஸ். கோதண்டராமய்யா
2. திரு. ஏ. சுப்பிரமணியம்
3. திருமதி த. ந. அனந்தநாயகி
4. திரு. மணலி சி. கந்தசாமி
5. திரு. க. சுப்பு
6. திரு. துரைமுருகன்
7. திரு. என். கணபதி
8. திரு. முனு ஆதி

அவர்களில் திருவாளர்கள் கே. எஸ். கோதண்டராமய்யா, ஏ. சுப்பிரமணியம், மனலி சி. கந்தசாமி, க. சுப்பு ஆகியோர் தங்கள் வேட்புத்தாள்களை திரும்பப் பெற்றுக் கொண்டதால், முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது நான்கு என்பதால், கீழ்க்கண்ட நான்கு வேட்பாளர்களும் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் என நான் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திருமதி த. ந. அனந்தநாயகி
2. திரு. துரை முருகன்
3. திரு. என். கணபதி
4. திரு. முனு ஆதி

4. அரசினர் சட்டமுன்வடிவு.

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறைகள்) திருத்த சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறைகள்) திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய பேரவையின் அனுமதியைக் கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : சார், இந்தச் சட்டமுன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 14—மருத்துவம்

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் "கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,04,70,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்" என்ற கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, to discuss about the need to increase the number of seats in Medical Colleges and to change the procedure of selection of students for Medical Colleges, I move—

"That the allotment of Rs. 21,04,70,800 under Demand No. 14—Medical be reduced by Rs. 100"